**சங்கீதம் 32**

**மன்னிக்கப்படுதலில் உள்ள சந்தோஷம்**

1. எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.

2எவனுடைய அக்கிரமத்தைக் **கர்த்தர்** எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்.

3நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று.

4இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று. (சேலா)

5நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் **கர்த்தருக்கு** அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். (சேலா)

6இதற்காகச் சகாயங்கிடைக்குங்காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது.

7நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர். (சேலா)

8நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

9வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.

10துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; **கர்த்தரை** நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்.

11நீதிமான்களே, **கர்த்தருக்குள்** மகிழ்ந்து களிகூருங்கள்; செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த முழக்கமிடுங்கள்.

**அறிமுகம்:**

இந்த சங்கீதம் தாவீதினால் பாடப்பட்டது. தாவீது பத்சேபாளுடன் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்த பின்பு, தேவனுடைய மன்னிப்பை பெற்ற பின்பு பாடப்பட்ட சங்கீதமாய் இருக்கிறது (2 சாமுவேல் 11, 12). இந்த சங்கீதமானது சங்கீதம் 51 -வுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. சங்கீதம் 51 – பின்பு பாடப்பட்டதாக இது இருக்கலாம்(சங்கீதம் 51:2-4). சங்கீதம் 51 தாவீது மன்னிப்பிற்காக பாடப்பட்டதாக இருக்கிறது (சங் 51:9), சங்கீதம் 32 தேவனிடம் இருந்து மன்னிப்பு கிடைத்ததினால் உண்டான சந்தோஷத்தின் வெளிப்பாடாக இருக்கிறது(சங்கீதம் 32:1-2, 5). தாவீது தனது பாவத்தை மறைப்பதை நிறுத்திவிட்டு, தேவனிடமிருந்து மன்னிப்பை பெற்றுக்கொண்டு வந்தபோது அவர் உணர்ந்த ஆழ்ந்த உணர்ச்சி மற்றும் ஆவிக்குரிய நிம்மதியை இந்த சங்கீதம் பிரதிபலிக்கிறது.

a. **“அவன் பாக்கியவான்” (வ 1,2) -** உங்களுக்கு தெரிந்த மிகவும் சந்தோஷமான நபர் யார்? அவர் ஏன் சந்தோஷமாய் இருக்கிறார் என அவரால் எல்லாருக்கும் சொல்ல முடியுமா? அவருடைய சந்தோஷத்திற்கு எது காரணமாய் இருக்கும்? நீங்கள் சந்தோஷமாய் இருக்கிறீர்களா? எது உங்களை சந்தோஷப்படுத்த வேண்டும் என உங்களுக்கு தெரியுமா? இந்த சங்கீதத்தில் தாவீதின் வாழ்க்கையில் அவருக்கு கிடைத்த உண்மையான சந்தோஷத்தை நம்முடன் பகிர்ந்துக்கொள்கிறார். இதே சந்தோஷமும், மகிழ்ச்சியும் நம்முடைய வாழ்க்கையில் தேவைப்படுகிறது. தாவீது இப்படி கூறுகிறார்

“எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.
எவனுடைய அக்கிரமத்தைக் **கர்த்தர்** எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான் “

தாவீது உரியாவின் மனைவியான பத்சேபாளுடன் தவறான முறையில் உறவுக்கொண்டதினாலும், ( 2 சாமு 11:1-4). தாவீது அந்த தவறை மறைக்க முயற்சி செய்தான் ( 2 சாமு 11:6- 11), உரியாவை கொலை செய்தான் (2 சாமு 11:14-17). தேவன் நாத்தான் தீர்க்கதரிசியின் மூலம் தாவீதின் பாவத்தை அவனுக்கு தெரியப்படுத்தின போது, அவன் தன்னுடைய தவறை உணர்ந்து, வருத்தப்பட்டு தேவனிடம் மன்னிப்பை எதிர்ப்பார்த்தான் ( 2 சாமு 12:1-23). தேவன் தாவீதின் அக்கிரமத்தை, பாவத்தை, மீறுதலை மன்னித்ததினால் அவன் பெற்ற சந்தோஷத்தை, இந்த சங்கீதத்தில் தெரியப்படுத்திறான் ( சங் 32:5).

யார் பாக்கியவான்?

1. மீறுதல்(Transgression = தேவனுடைய வார்த்தையை மீறுதல், வறும்பு மீறுதல் 1 யோவான் 3:4 ) – மன்னிக்கப்படவன்.
2. பாவம் (*Sin)* - மூடப்பட்டவன்
3. அக்கிரமம் (iniquity = அக்கிரமம், அநீதி, ஒழுங்கின்மை) – கர்த்தர் எண்ணாதிருக்கிறவன்;

இவர்கள் பாக்கியவான் என தாவீது கூறுகிறார். பவுலும் கூட இந்த வசனத்தை மேற்க்கொள் காண்பிக்கிறார். ரோமர் 4:7,8 – யில் “- எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய

பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான். பவுல் நாம் நீதிமான்களாக மாறுவது நியாயப்பிரமானத்தின் கிரியைகளினால் அல்ல, தேவனுடைய கிருபை என்பதை தான் பவுல் இந்த அதிகாரத்தில் கூறுகிறார், இதற்கு அடுத்த வசனத்திலேயே (வசனம் 9) இதை **"பாக்யம்"** என கூறுப்பிடுகிறார். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம் நீதிமான்களாய் இருப்பது பெரிய பாக்யமாக இருக்கிறது என்பதோடு அது சந்தோஷத்திற்கு குரிய விஷயம். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு நீங்கள் எவ்வளவு விலைக்கொடுக்க வேண்டும் தெரியுமா? தேவன் அந்த பாவமன்னிப்பை இலவசமாய் கொடுக்கிறார் (ரோமர் 3:24).

b. **"பாவமானது சந்தோஷத்தை எடுத்துப்போடக்கூடியதாக இருக்கிறது" (வ 3,4) –** தாவீது தன்னுடைய பாவத்தை மறைவாக செய்துவிடலாம் என நினைத்தார், ஆனால் தேவன் அதை பார்க்கிறார் என்பதை அவர் மறந்துவிட்டார் ( 2 சாமு 11:27). அவர் தன்னுடைய தவறை அடக்கிவைத்த வரையிலும் அவர் வேதனைப்பட்டதாக கூறுகிறார் .

   a. பாவமானது வேதனையுள்ளது, வேதனையை தர கூடியதாக இருக்கிற புண்ணை போன்று இருக்கிறது என ஏசாயா 2:4-6 –யில் நாம் படிக்கிறோம் மேலும் சங்கீதம் 38:4 கூட இதை தான் கூறுகிறது. ஆதாமும், ஏவாளும் தேவனுடைய வார்த்தையை மீறி பாவம் செய்த போது அவர்களுடைய வாழ்க்கையில் இருந்து சந்தோஷத்தை எடுத்துப்போடப்பட்டது. (ஆதி 3:6-12), அவர்கள் குற்ற உணர்ச்சியினாலும், வெட்கத்தினாலும் போய் தேவனைவிட்டு விலகினார்கள் பயந்தினால் அவர் அதை செய்தார்கள்.

ஆதியாகமம் 3:6-10 அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.

பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் **உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்**.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்.

அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, **நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்**".

**c.** பாவமானது நம்மை வேதனைப்படுத்துகிறது என்பது உண்மை, பாவமானது தேவனையும் நம்மையும் தேவனையும் எதிரியாக மாற்றுகிறது (வ 4; எசா 59:2; கொலோ 1:21). மனிதர்களாகிய நாம் ஏதாவது தவறு செய்துவிட்டோமே என்கிற

குற்றவுணர்வுடனும், வெட்கத்தோடும் நாம் வாழ்ந்துக்கொண்டுயிருக்கிறோம் (அ) நீங்களும் தவறு செய்துவிட்டீர்கள் என்கிற கவலையுடனும், இருக்கலாம். நாம் பார்க்கிற சமுக வலைதளங்கள் (Instragram, youtube), நாம் தவறு செய்வதற்கு எளிய காரணமாய் மாறிவிடுகின்றன. இதனால் நீங்கள் உங்களை நீங்களே தாழ்வான நிலைக்கு தள்ளி வேதனைப்படலாம். இந்த குற்றவுணர்வு உங்களை மன அளவில் பாதிக்கும். உங்களை தினமும் வேதனைப்படுத்தும். ஆனால் நமக்கு ஒரு தீர்வு இருக்கிறது, அதாவது நம்முடைய குற்றங்களை தீர்ப்பதற்கு ஒரு வழியிருக்கிறது அது தான் **தேவனுடைய மன்னிப்பு.**

**C. "தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்" (வ 5) -** பாவத்தின் தண்டனையில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு ஒரு வழி தேவனுடைய மன்னிப்பை பெற்றுக்கொள்வது தான். தாவீது தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு தேவனிடத்தில் மன்னுப்பை தேடியதால் அவர் தேவனால் மன்னிக்கப்பட்டார், சந்தோஷத்தை பெற்றுக்கொண்டார்.

1. தாவீதின் பாவத்தையும், தண்டனையும் எது நீக்கியது? இயேசுவின் மரணம் தான். எபிரெயர் 9:15 – "**ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்**". இயேசுவின் மரணத்தில் சித்தப்பட்ட அவருடைய இரத்தம், பழைய ஏற்பாட்டிலும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்த தேவனுடைய பிள்ளைகளின் பாவத்தையும் போக்கி நம்பிக்கை கொடுத்தது, அதைப்போலவே இன்று நம்முடைய பாவங்களையும் போக்கி நமக்கு உண்மையான நம்பிக்கை தருகிறது.
2. புதிய ஏற்பாட்டில் தேவனுடைய சுவிசேஷத்தை கேட்டு, விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுங்கொள்கிற எல்லாருடைய, எல்லா பாவங்களையும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நீங்கி, அவர்களை நீதிமான்களாய் மாற்றுகிறது.(ரோமர் 6:3-6, 1 யோவான் 1:7). அதைப்போல ஞானஸ்நானம் பெற்றவர்கள், மீண்டும் பாவம் செய்யும் போது,அவர் தான் செய்த தவறுக்காக வருத்தி, தேவனிடம் மன்னிப்பை கேட்டு, அவர்கள் கிறிஸ்துவின் வசனத்தில் நடக்கும் போது அவர்களுடைய பாவங்களை இயேசுவின் இரத்தம் நீங்கிப்போடுகிறது. ( 1யோவான் 1:6,7) இயேசுவின் இரத்தமே எல்லாருடைய பாவத்தை போக்க கூடியதாக இருக்கிறது, எல்லாருக்கும் நம்பிக்கையை தர கூடியதாக இருக்கிறது. இதினால் தான் அவர் உலக ரட்கராய் இருக்கிறார்.(1 யோவா 4 :14)

D. **"நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்" (வ 6,7)** – தாவீதின் பாவங்கள் அவனுக்கு மன்னிக்கப்பட்டதினால், அவன் தேவனால் பாதுகாக்கப்பட்டவனாய் இருந்தான். அவனுடைய பாவத்தை தேவனே மன்னித்ததினால் அவன் இனி யாருக்கு கவலைப்பட்டு, பயப்பட வேண்டும்?

a. புதிய ஏற்பாட்டில் நமக்கு பாதுகாப்பாய் இருப்பது இயேசு கிறிஸ்து. யுதா 1 –யில் இயேசுவினால் காக்கப்பட்டிருக்கிறோம் என படிக்கிறோம். அவரே நம்முடைய இரட்சகாரய்

இருக்கிறார் (தீத்து 2:13). நாம் இயேசுவினால் சபை என்னும் பாதுகாப்பான இடத்தில் இருக்கிறோம். (அப் 2:47). நம்முடைய ஆத்துமா காக்கப்பட்டு இருக்கிறது. (2 பேது 1:4). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு தைரியம் கொடுக்கிறது. (எபி 10:20). அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் போது ரோமர் 8:33, 34 -யில் " தேவன் தெரிந்துக்கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" . என கூறுகிறார். புதிய ஏற்பாட்டில் நமக்கு வர வேண்டிய தண்டனையை இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொண்டதினால், நாம் பாதுகாப்பாய் இருப்பதோடே, அவர் நமக்காக தேவனிடத்தில் பரிந்துப்பேச கூடியவராய் இருக்கிறார். ( 1யோவா 2:1,2). அவர் இருக்க நமக்கு என்ன கவலை? நன்றி இயேசுவே.

**E. தேவனுடைய வழியும் நமக்கான மகிழ்ச்சியும்: (வ 8-11)** தாவீது தவறு செய்த பிறகு, அவனுக்கு மன்னிப்பு கிடைத்த பின்பு, அவனுக்கு தேவன் கூறுகிறது, நான் காண்பிக்கும் வழியில் நட, இல்லை என்றால், மிருகத்தைப்போல நீ இழுக்கப்படுவாய் என்கிற எச்சரிக்கையை தாவீது பெற்றுக்கொள்கிறார். (வ 8, 9). தேவனுடைய வழியில் நடப்பது தான் நமக்கு மகிழ்ச்சியை தருகிறது. தாவீது தேவனுடைய போதனைகளும், வழி நடந்தலும் தனக்கு மீண்டும் கிடைக்கிறது என்பதால் அவர் தன்னுடைய மகிழ்ச்சியையும், நம்பிக்கையும் காண்பிக்கிறார்.

1. தேவனுடைய வழியில் நடப்பதினாலும், அவருடைய ஆலோசனையின் படி நடப்பதினாலும், அது சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நமக்கு கொண்டு வருகிறது. (ஏசா 48:17,18; சங்கீதம் 81:13-16)

2. இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகளை கவனியுங்கள் "**என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்**" – (மத்தேயு 11:29)

3. அப்போஸ்தலர்கள் தேவனுடைய வார்த்தையின் படி நடந்ததினால், அவர்கள் அவமானப்பட்டாலும், அவர்கள் சந்தோஷப்பட்டார்கள், அவர்களால் எப்படி துன்பத்திலும் சந்தோஷமாயிருக்க முடிந்தது ?. (அப் 5:41)

4. பிலிப்பால் சுவிசேஷத்தை கேள்விப்பட்ட, எந்தியோப்பியா மந்திரி, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்ற பின்பு, அவர் சந்தோஷந்தோடே தன் வழியில் போனான் (அப் 8:39)

தேவனுடைய வார்த்தையின் படியே நடப்பதால், மாத்திரம் தான் நம்முடைய வாழ்க்கையில் சந்தோஷம் கிடைக்கிறது, இந்த சந்தோஷம் துன்பத்திலும் மற்றும் அவமானத்திலும் கூட இருக்கிறது.

"துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்; நீதிமான்களே, **கர்த்தருக்குள்** மகிழ்ந்து களிகூருங்கள்" – சங்கீதம் 32:10, 11.

நாம் எல்லாரும் குருடர்கள் போல தான் இருக்கிறோம், நாளை என்ன நடக்கும் என்பது தெரியாமல் வாழ்ந்துக்கொண்டு இருக்கிறோம், நாம் தேவனுடைய வார்த்தையின் படி

நடப்பதால், ஆலோசனையை பெற்றுக்கொள்வதால் தேவனை சார்ந்திருப்பதால் நாம் நம்முடைய வாழ்க்கையில் சந்தோஷத்தை பெற்றுக்கொள்கிறோம். சாமாதனத்தை பெற்றுக்கொள்கிறோம் வாழ்க்கை எப்படி இருந்தாலும் நாம் பெற்றுக்கொள்கிறோம். .